ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2207/14 - 2020 දෙසැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.12.24

*2207/14 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**(அரச காணியில் உள்ள கருவா பயிர்ச்செய்கையின் பலனை பறித்துக்கொள்ளும் உரிமையை ஏலத்தில் விற்பனை செய்தல்) மாத்தறை மாவட்டத்தின் உல்லல மற்றும் கிரிந்த மகின் பஹல கிராமத்தில் அமைந்துள்ள அரச காணிகளில் உள்ள பயிர்ச்செய்கைகளின் பலனை ஏலத்தில் விற்பனை செய்தல்**

*இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அரச காணியில் உள்ள கருவா உற்பத்தியை 2021, சனவரி மாதம் முதலாம் திகதியில் ஆரம்பிக்கப்பட்டு 2030, திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுறும் பத்து வருட கால வரையறைக்குள் பறித்துக்கொள்ளும் உரிமையை (உரிய நிபந்தனைகளுக்கு இணங்கி) மாத்தறை மாவட்ட கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் (இவர் இதற்கு முன்னர் பிரதேச செயலாளர் என இனம்காட்டப்படுவதுடன் குறித்த வாசகம் குறித்த பிரதேச செயலாளரினால் ஏல விற்பனையின் நியதிகளுக்கு அமைய உரித்தினை வழங்கும் எந்தவொரு உத்தியோகத்தரும் உட்படும்) 2020, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு உரிய காணியில் ஏலத்தில் விற்கப்படுவதாக இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*2. ஆரம்ப மனு 281,500.00 ரூபாவாகும். ஆரம்ப மனுவிற்கு குறைந்த மனுவோ, ஆரம்ப மனுவிற்கு கேட்கப்படும் வேண்டுதல்களோ ஏற்கப்பட மாட்டாது.*

*3. ஏல விற்பனையின் போது தீர்மானிக்கப்படும் மனுவின் மீது வருடாந்த குத்தகை தீர்மானிக்கப்படுவதோடு, முதல் 05 வருட காலத்தின் பின்னர் எதிர்வரும் 05 வருட காலம் தொடர்பாக வருடாந்த குத்தகை அரச விலைமதிப்பாளரின் விலைமதிப்பின்படி திருத்தப்படும். அங்கு அரச விலைமதிப்பாளரினால் விலைமதிக்கப்பட்ட பணமானது குத்தகையை ஏற்கப்படுபவரினால் வருடாந்தம் செலுத்தப்பட்ட குத்தகையில் ஏதாவது வித்தியாசம் இருக்கும் சந்தர்ப்பத்தில் அதன் கூடிய அலகு வருடாந்த குத்தகையாகக் கருதப்படும் (வியாபார சந்தையில் கருவாவின் விலை அதிகமாக குறைந்த சந்தர்ப்பத்தில் அல்லது இயற்கை அனர்த்த நிலையின் போது அல்லது கிருமிகளின் தாக்கத்தின் காரணமாக பயிர்ச்செய்கைக்கு அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளதென தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைத் தவிர).*

1A - G 33368 — 25 (2020/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. ஏதாவது மனுவொன்றை ஏற்றுக்கொள்ள முன்னர் அந்த மனுவினை முன்வைத்தவர் உண்மையானவரென்றும் ஏல விற்பனை தொடர்பாக நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள அவருக்கு உள்ள தகுதி தொடர்பாக பிரதேச செயலாளர் திருப்தியடைந்திருத்தல் வேண்டும். அவர் அது தொடர்பாக திருப்தியடையாவிடின், அந்த மனுவினை நிராகரித்து ஏல விற்பனையைத் தொடர்ந்து நடத்த பிரதேச செயலாளருக்கு அதிகாரமுண்டு.

5. அனைத்து மனுவாளர்களும் ஏல விற்பனையின் போது கலந்து கொள்ளுதல் வேண்டும். தமக்கு கலந்து கொள்ள முடியாவிடின் பிரதிநிதி ஒருவரை பதிலாக அனுப்பி வைக்க முடிந்ததோடு தமது உத்தரவைப் பெற்ற கடிதத்தினைப் பரீட்சிப்பதற்காக ஏல விற்பனைக்கு முன் கம்புறுபிட்டிய பிரதேச செயலாளருக்கு முன்வைத்தல் வேண்டும்.

6. தமது விலைமனுவினை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுவாளர்களினால், தமது மனுவின் சரி பாதியை கம்புறுபிட்டிய பிரதேச செயலாளருக்கு அதே சந்தர்ப்பத்தில் செலுத்துதல் வேண்டும். மிகுதி பாதியை ஏலவிற்பனை நடத்திய திகதியிலிருந்து இரண்டு வாரத்திற்குள் செலுத்ததல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுவாளர்களுக்கு காணியின் நுகர்வை ஒப்படைப்பது மனுவின் முழுப்பணத்தைச் செலுத்திய பின்னராகும். மனுவை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் மனுத் தொகையில் சரி பாதியையோ அல்லது ஏல விற்பனை நடத்திய திகதியிலிருந்து இரண்டு வாரத்திற்குள் மிகுதிப் பணத்தையோ மனுவாளர்களினால் செலுத்தத் தவறினால் ஏல விற்பனையை இரத்துச்செய்து ஏதாவது ஒரு தொகைப் பணத்தைச் செலுத்தியிருப்பின் அப்பணத் தொகையை அரசியல்மயப்படுத்தப்பட்ட பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

7. தெரிவுசெய்யப்பட்ட விலைமனுவாளர் பிரதேச செயலாளரினால் பிணைப் பணமாக விதிக்கப்பட்ட ஏதாவது ஒரு பணத்தொகை இருப்பின் அதனைப் பிணைப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு விதிக்கப்படும் பணமானது, அவரது மனுவின் நூற்றுக்கு 10% இற்கு அதிகரிக்கக் கூடாது.

8. தான் வைத்த மனுத்தொகையையும் பிணைப்பணத் தொகையையும் செலுத்தியதன் பின்னர் கீழே குறித்த நிபந்தனைகள் உட்பட்ட உத்தரவுப்பத்திரம் ஒன்றைப் பெற மனுவாளருக்கு உரிமையுண்டு.

(அ) உத்தரவுப்பத்திரம் உடையவருக்கு எழுத்து மூலமான ஒரு மாத கால முன்அறிவித்தலின்படி அறிவித்தலை விடுத்து பிரதேச செயலாளரினால் உத்தரவுப்பத்திரத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் முடிவாக்க முடியும். அந்த எழுத்து மூல அறிவித்தலை உத்தரவுப்பத்திரம் உடையவருக்கு தனிப்பட்ட முறையில் அல்லது அவரது இறுதி வதிவு நிலைய முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் அல்லது கொடுத்தல் முடியும்.

(ஆ) காணி தொடர்பான அனைத்து வரிமதிப்பு மற்றும் வருமான வரி விலைமதிப்பு மற்றும் செலவுகள் போன்றன உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் செலுத்துதல் வேண்டும்.

(இ) உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் நிரந்தர மற்றும் தற்காலிக அல்லது ஏதாவது அமைப்புகள் அமைத்தல் கூடாது.

(ஈ) உத்தரவுப்பத்திரம் பெற்றவரினால் காணியில் உள்ள அனைத்து எல்லைத் தூண்களையும் உரிய நிலையில் வைத்திருத்தல் வேண்டும்.

(உ) காணியில் உள்ள மரங்களை வெட்டுதல், அகற்றுதல், எந்தவிதத்திலாவது அவற்றுக்கு நட்டம் ஏற்படுத்தல் கூடாது.

(ஊ) இந்தக் காணியால் கம்புறுபிட்டிய பிரதேச செயலாளரின் அனுமதியின்றி மணல், மண் மற்றும் பார் கற்கள் அல்லது வேறு பொருட்கள் அகற்றுதல் கூடாது.

(எ) காணி ஆணையாளரின் அனுமதியைப் பெறாமல், உத்தரவுப்பத்திரம் உடையவரினால் தமக்கு உள்ள உரிமையை ஒப்படைத்தல், மீண்டும் குத்தகைக்கு விடல், அடகு வைத்தல், அல்லது வேறு ஏதாவது வழியில் அகற்றல், கொடுக்கல் வாங்கல் செய்தல் கூடாது.

(ஏ) எந்த சந்தர்ப்பத்திலும் கருவா தோட்டத்திற்கு உட்பட்டு ஆய்வு செய்வதற்கு பிரதேச செயலாளருக்கு அல்லது அவரின் அதிகாரம்பெற்ற எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அதிகாரம் உண்டு.

(ஐ) உத்தரவுப்பத்திர காலம் முடிவடைய முன் காணியை முற்றுமுழுதாக அல்லது அதன் ஒரு பகுதியை அரசுக்கு தேவைப்படுவதாயின் ஒரு மாத கால முன் அறிவித்தலின் பின் உத்தரவுப்பத்திரம் உடையவரினால் காணியையோ, அல்லது ஒரு பகுதியையோ பிரதேச செயலாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தில் முறையான ஒரு தொகை பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கும் குத்தகைப் பணம் செலுத்தப்படாத காலகட்டத்திற்கு செலுத்தப்பட்ட குத்தகைத் தொகையை குறைத்துக்கொள்ளவும் தகுதி உண்டு.

(ஒ) உத்தரவுப்பத்திரத்தைப் பெற்றவரினால் நிபந்தனைகளை மீறுவதாயின் எந்தவித நட்டஈடுமின்றி காணியின் நுகர்வு உரிமையை மீண்டும் கைப்பற்றவும், பிணைப்பணத்தின் முழுத்தொகையை அல்லது ஒரு பகுதியை அரசுடைமையாக்க பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

(ஓ) உத்தரவுப்பத்திரம் உடையவரினால் செய்யப்பட்ட அபிவிருத்தி மற்றும் வேறு ஏதாவது அமைப்பு முயற்சிகள் தொடர்பாக எந்தவித நட்டஈடும் பெற உத்தரவுப்பத்திரம் உடையவருக்கு உரிமையில்லை.

(ஔ) உத்தரவுப்பத்திரமுடையவரினால் காணியில் உள்ள விளைச்சலை சிறந்த முறையில் பரிபாலித்து களைகளை அகற்றி, நோய்க் கிருமிகளை நீக்கி விதிக்கப்பட்ட அளவில் உரமிட்டு நிலத்தை கொத்தி நிலப்பாதுகாப்பு முறையைக் கையாண்டு, தோப்பில் அழகாக வளர்ச்சியடைந்த தோப்புக்ளை மிகுதி வைத்து முதிர்ந்த மரங்களை அறுவடை செய்தல் ஆகிய விளைச்சல் முறைகளை முறையாக நடத்துவதோடு ஏற்றுமதி விவசாய முறைகளை விரிவாக்கி உத்தியோகத்தரினால் வழங்கப்படும் ஆலோசனைகளை வழிமுறைகளின்படி பயிர்ச்செய்கையைக் கையாளுதல் வேண்டும்.

**அட்டவணை**

*மாத்தறை மாவட்டத்தின், கபுறுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் மாஸ்முல்ல கிராம அலுவலர் பிரிவின் உல்லல மற்றும் கிரிந்த மகின் பஹல கிராமத்தில் அமைந்துள்ளதும் மு. கி. பட இலக்கம் மாற/704 படத்தில் துண்டு இலக்கம் 1.2 இல் காட்டப்பட்டுள்ளதும் விஸ்தீரணம் சுமார் 08ஏ. 00றூ. 24 பேர்ச்சஸ் கொண்ட பொதுகொலதெனிய பொதுகொலதெனியஹேன என அழைக்கப்படும் காணியின் ஒரு பகுதி 05ஏக்கர் 03றூட் 25 பேர்ச்சஸ் கொண்ட பரப்பளவில் கருவா பயிர்ச்செய்கை கொண்ட காணி.*

**எல்லைகள்-**

***துண்டு இலக்கம் 01 :***

வடக்கு : *க. அ. ஆ. ப. 27 இல் 18 மற்றும் 18 பீவீ ;*
கிழக்கு : *க. அ . ஆ. ப. 27 இல் 26எப் மற்றும் ஆ. ப. 704 இல் துண்டு இலக்கம் 02 ;*
தெற்கு : *மு. பி. பட இல. 704 இல் துண்டு இலக்கங்கள் 02 மற்றும் ஆ. பட இல. மாற 252 இல் துண்டு இலக்கங்கள் 01, 02.*
மேற்கு : *மு. பி. பட இல. மாற 252 இல் துண்டு இலக்கங்கள் 01, 18, 19, 18பீவீ (தற்போதைய கருவா பயிர்ச்செய்கையின் பரப்பளவு ஏக்கர் 03, றூட் 02, பேர்ச்சஸ் 19.*

***துண்டு இலக்கம் 02 :***

வடக்கு : *ஆ. ப. இல. 704 இல் துண்டு இலக்கம் 01*
கிழக்கு : *ஆ. ப. இல. 704 இல் துண்டு இலக்கம் 01, க. அ. ஆ ப. 27 இல் துண்டு இலக்கம் 26ஏவீ.*
தெற்கு : *மு. பி. பட இல. 704 இல் துண்டு இலக்கங்கள் 03, க. அ. ஆ பட 27 இல் துண்டு இலக்கம் 26*
மேற்கு : *மு. பி. பட இல. மாற 252 இல் துண்டு இலக்கங்கள் 01 மற்றும் ஆ. பட இல. 704 இல் துண்டு இலக்கம் 02 (தற்போதைய கருவா பயிர்ச்செய்கையின் பரப்பளவு ஏக்கர் 02, றூட் 01, பேர்ச்சஸ் 06.)*

*சின்தக்க அபேவிக்ரம,*
*பிரதேச செயலாளர்.*

*பிரதேச செயலகம்,*
*கம்புறுபிட்டிய,*
*2020, திசெம்பர் 09.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.